**IN THE COURT OF THE PRINCIPAL DISTRICT JUDGE,**
**KANNIYAKUMARI AT NAGERCOIL.**

20.01.2026

C.O.S. No. 3/2024

D.W. 1 திரு.ஜாண்ெஹன்றி

சாட்சி மீண்டும் இன்று அழைக்கப்பட்டு சத்தியப்பிரமாணம் செய்யப்பட்டு விசாரிக்கப்படுகிறார்.

**குறுக்கு விசாரணை (வாதி தரப்பில்) -**

தமிழ் மற்றும் ஆங்கிலம் எனக்கு படிக்க தெரியும். ஸ்காட் கிறிஸ்தவ கல்லூரியில் எத்தனை வருடங்களாக வேலை பார்க்கிறேன் என்றால் 1988 லிருந்து வேலை பார்க்கிறேன்.

இந்த நீதிமன்றத்தில் எனக்கு சாட்சியம் அளிப்பதற்கு இந்த வழக்கின் பிரதிவாதிகள் எதாவது அதிகார கடிதம் கொடுத்துள்ளார்களா என்றால் இல்லை. இந்த வழக்கில் நான் தரப்பினரும் கிடையாது என்றால் சரிதான்.

இந்த வழக்கு சம்பந்தமான விவரங்கள் எனக்கு தெரியும் என பிரமாண வாக்குமூலத்தில் கூறியுள்ளேன் என்றால் சரிதான். எப்போதிலிருந்து தெரியும் என்றால் இந்த வ ழக்கு சம்பந்தமான பணி ஆரம்பத்திலிருந்து தெரியும்.

ஸ்காட் கிறிஸ்தவ கல்லூரியில் ஒரு மூன்று அடுக்கு கட்டிடம் கட்டுவதற்கு ஒப்பந்த புள்ளி கோரப்பட்டது என்றால் சரிதான். அந்த ஒப்பந்தபுள்ளியில் வாதிக்கு அந்த ஒப்பந்தத்தை கொடுத்தார்கள் என்றால் சரிதான். 04.11.2020 ல் ஸ்காட் கிறிஸ்தவ கல்லூரி வாதியிடம் அந்த கட்டிடம் கட்டுவதற்கு ஒரு ஒப்பந்தம் செய்து

கொண்டது என்றால் சரிதான். 04.11.2020 க்கு பிறகுதான் அந்த கட்டிடம் கட்ட வேண்டிய நிலத்தை வாதியிடம் ஒப்படைத்தார்கள் என்றால் சரிதான். அந்த ஒப்பந்தத்தின் அடிப்படையில் அந்த கட்டிட வேலையின் மதிப்பு ரூபாய் 1,39,90,250/- என்றால் சரிதான்.

இந்த மூன்று அடுக்கு கட்டிட வேலைக்கான ஜல்லி, எம்சேன்ட் மற்றும் மணல் ஆகியவற்றை வாதியே அந்த கல்லூரி வளாகத்தில் இறக்கி வேலை செய்து வந்தார்கள் என்றால் சரிதான். அதே போல அந்த வேலைக்கான ஆட்களையும் அவரே கொண்டு வந்து செய்தார் என்றால் சரிதான். அந்த கட்டிடடத்திற்கான அஸ்திவாரம் தோண்டி பில்லர்கள் வைத்துதான் கட்டிடம் கட்ட முடியும் என்றால் சரிதான்.

கட்டிடம் கட்டுவதற்கு முன்பாக 10 அடி ஆழம் மண் தோண்டி தான் பில்லர்கள் கட்ட வேண்டும் என்றால் சரியல்ல, 6 அல்லது 7 அடி தோண்டியிருப்பார்கள். 10 அடிக்கு மேல் ஆழம் தோண்டிதான் பில்லர்கள் கட்டியுள்ளார்கள் என்றாலும் நான் தவறாக சொல்கிறேன் என்றாலும் சரியல்ல.

ஒவ்வொரு தளம் மற்றும் பில்லர்கள் கட்டி அதன்பிறகு 15 முதல் 20 நாட்கள் விட்டு விட்டு அதன்பிறகுதான் அடுத்த தளம் மற்றும் பில்லர்கள் கட்ட முடியும் என்றால் சரிதான்.

கட்டிடத்திற்கான சென்டிரிங் வேலை மற்றும் அதற்கான வேலையாட்கள் ஆகியவற்றை வாதிதான் கொண்டு வந்து செய்தார்கள் என்றால் சரிதான். இரண்டாவது தளம் மேற்கூரை பணிகள் மற்றும் கட்டிட Elevation போன்ற

பணிகள் மட்டும்தான் வாதி செய்யவில்லை என எனது பிரமாண வாக்குமூலத்தில் கூறியுள்ளேன் என்றால் சரியல்ல, இரண்டாவது தளமே அவர் கட்டவில்லை. நான் எனது சத்திய பிரமாண வாக்குமூலத்திற்கு எதிராக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

எல்லா வேலையாட்களுக்குரிய சம்பளம், மற்றும் வேலைக்குரிய பொருட்கள் ஆகியவற்றிற்கான தொகை ஆகியவற்றை வாதி தனது நிறுவனத்தின் பில் மூலமாகதான் கோரி அதன்படி பிரதிவாதிகள் அவருக்கு தொகை செலுத்தி வந்தார்கள் என்றால் சரிதான்.

சிமெண்ட் மற்றும் கம்பி மட்டும்தான் எங்கள் கல்லூரியினால் கொடுக்கப்படும் என்றாலும் மற்றும் அனைத்து பொருட்கள் மற்றும் அனைத்து வேலையாட்களை வாதி தான் பார்த்துக்கொண்டார் என்றால் சரிதான். ஒயரிங் பொருட்களும் கல்லூரிதான் பார்த்துக் கொண்டது.

வேலை செய்வதற்கான தண்ணீரையும் வாதிதான் ஏற்பாடு செய்து கொண்டார் என்றால் சரியல்ல, கல்லூரி ஏற்பாடு செய்து கொடுத்தது.

வா.சா.ஆ. 1 ஆவணத்தின் படி தண்ணீரை வாதிதான் ஏற்பாடு செய்து கொள்ள வேண்டும் என்றால் சரிதான். வா.சா.ஆ. 1 ஒப்பந்தம் ஏற்படுத்தப்பட்ட தேதி 04.11.2020 லிருந்து கொரோனா பாதிப்பு ஏற்பட்டுவிட்டது என்றால் சரிதான்.

மதிய உணவு இடைவேளைக்காக குறுக்கு விசாரணை ஒத்தி வைக்கப்படுகிறது.

**குறுக்கு விசாரணை தொடர்ச்சி (வாதி தரப்பில்):-**

பி.வா.சா.ஆ. 20 ஆவணத்தை வாதிக்கு சார்பு செய்ததாக காட்டும் ஆவணம் எதுவும் உள்ளதா என்றால் Despatch Register உள்ளது. அந்த ஆவணத்தை இந்த நீதிமன்றத்தில் தாக்கல் செய்தோமா என்றால் இல்லை. பி.வா.சா.ஆ. 20 அசல் ஆவணம் என்றால் சரியல்ல, அது நகல். பி.வா.சா.ஆ. 20 ஆவணம் அசல் என்றாலும் அந்த ஆவணம் ஒரு போதும் வாதிக்கு சார்பு செய்யப்படவில்லை என்றாலும் அது இந்த வழக்கிற்காக உருவாக்கப்பட்டுள்ளது என்றாலும் சரியல்ல. அதனால்தான் பி.வா.சா.ஆ. 20 ஆவணத்தை வாதிக்கு சார்பு செய்ததாக காட்டும் எந்த ஆவணத்தையும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல.

வாதி எங்கள் கல்லூரிக்கு அனுப்பிய பி.வா.சா.ஆ. 20 ஆவணத்தை 2 வது தள மேற்கூரை பணிகளை மாற்று வழியில் செய்வதற்கு மட்டும்தான் தனக்கு ஆட்சேபனை இல்லை என குறிப்பிட்டுள்ளார் என்றால் சரிதான்.

இதுவரையில் வா.சா.ஆ. 1 ஒப்பந்தத்தை ரத்து செய்யவும் இல்லை, அந்த வேலையை வேறு ஒரு நபரிடம் ஒப்படைத்து ஒப்பந்தம் எதுவும் செய்யவும் இல்லை என்றால் சரிதான். மூன்று தளங்களிலும், ஒவ்வொரு தளத்திலும் தலா 9 அறைகள் உள்ளது என்றால் சரிதான். அந்த ஒவ்வொரு அறையும் 20 x 30 அடி அளவு உள்ளது என்றால் சரிதான். இதை தவிர ஒவ்வொரு தளத்திலும் கழிப்பறையும் உள்ளது என்றால் சரிதான். ஒவ்வொரு தளமும் சுமார் 9,000 சதுர அடி கட்டிட பரப்பு கொண்டது என்றால் சரிதான். அந்த ஒவ்வொரு தளத்திலும் உள்ள பில்லர்களின் பரப்பையும்

கணக்கிட்டால் அதை விட அதிகப் பரப்பளவு வரும் என்றால் சரியல்ல, பில்லர்களையும் சேர்த்துதான் சுமார் 9,000 சதுர அடி. நான் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் ஒவ்வொரு தளத்திலும் பில்லர்களையும் சேர்த்தால் சுமார் 14,000 சதுர அடி வரும் என்றால் சரியல்ல. ஒப்பந்தம் வாதியுடன் செய்து கொண்டபோது பைஜூ நிசித் பால் என்பவர் கல்லூரியின் செயலாளராக இருந்தார் என்றால்சரிதான். அதன்பிறகு 2021 ஆம் வருடம் தேர்தல் வந்து கல்லூரியின் பொறுப்பாளர்கள் மாற்றப்பட்டார்கள். அந்த தேர்தலை Synod ரத்து செய்து அட்காக் கமிட்டி நியமித்து, அதன் பேரில் பைஜூ நிசித் பால் என்பவரே கல்லூரியின் செயலாளராக அந்த கமிட்டியால் நியமிக்கப்பட்டார் என்றால் சரிதான். 2021 ஆம் ஆண்டு பைஜூ நிசித் பாலுக்கு எதிராக இந்த வாதி தேர்தலில் நின்றதால் அந்த காழ்ப்புணர்ச்சியின் காரணமாக வாதிக்கு இந்த ஒப்பந்தத்தின் கீழ் கொடுக்க வேண்டிய தொகையை பிரதிவாதிகள் கொடுக்கவில்லை என்றால் சரியல்ல. அதற்கு முன்பாகவே இருந்த தாளாளர் வாதிக்கு கொடுக்க வேண்டிய தொகையை கொடுத்து முடித்து விட்டார். நான் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் தாவா தொகை தர வேண்டியுள்ளது என்றாலும் சரியல்ல. வாதி தனக்கு கல்லூரி ரூபாய் 80,00,000/- தர வேண்டியுள்ளது என்றும், அதில் ரூபாய் 59,85,219/- கொடுத்ததாகவும் மீதி ரூபாய் 20,14,781/- கொடுக்க வேண்டியுள்ளது கூறி நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ள ஆவணங்களை பார்த்தேனா என்றால் நான் பார்க்கவில்லை. ரூபாய்20,14,781/- பிரதிவாதிகள் தராததால்தான் வாதி இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளார் என்றால் சரியல்ல.

25.09.2021 க்கு பிறகு கல்லூரியினால் வழங்கப்பட வேண்டிய சிமெண்ட் மற்றும் கம்பிகள் வாதிக்கு கொடுக்கப்படாததால்தான் இரண்டாம் தளத்திற்கு மேல் வாதியால் கட்டி முடிக்கப்படவில்லை என்றால் சரியல்ல. பிரமாண வாக்குமூலத்தில் நான் கூறியுள்ளவாறு 2021-2022 கல்வியாண்டில் புதிதாக MCA, MBA பாடப்பிரிவுகளுக்காக வகுப்பறைகள் கொடுக்க வேண்டும் என்ற நிலையில் இந்த ஒப்பந்தம் கோரப்பட்டது என்று வா.சா.ஆ. 1 ஒப்பந்தத்தில் குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான். வாதி கொரோனா கால கட்டத்திலும், வேலையாட்கள் கிடைக்காத காலத்திலும் பல கஷ்டங்கள்பட்டு, கல்லூரி கட்டிடடத்தை கட்டி கொடுத்தார் என்றும் அதனால் வாதி கோரியுள்ளவாறு தாவா தொகை அவருக்கு கிடைக்கதக்கது என்றாலும் சரியல்ல. வழக்கு செலவு தொகையுடன் அனுமதிக்கதக்கது என்றால் சரியல்ல.